1993 மார்ச் 17]

109—

ஆவடி நகரியத்தில் தெருவிளக்குகள் அமைத்தல்.

*10254—திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகரியத்தில் 700 தெரு விளக்குகள் அமைக்கக் கோரி மின்வாரியத்துக்கு அனுப்பப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 761 இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கக் கோரப்பட்டதில் 249 இடங்களுக்கு வைப்புத் தொகை பெறப்பட்டது. அவற்றுள் 146 இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டன. மீதமுள்ள 103 இடங்களில் 31—3—1993-க்குள் பணிகள் முடிக்கப்படும். ஏனைய 512 இடங்களுக்கான வைப்புத் தொகை பெறப் படவில்லை. இவற்றிற்கான வைப்புத் தொகை பெறப் பட்டு பணிகள் 31—3—1993-க்குள் முடிக்கப்படும்.

110—

பேராவூரணி தொகுதி பிள்ளையார் திடலில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுதல.

*12804—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம் பிள்ளையார் திடலில் புயல் பாதுகாப்பு இல்லம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?